5. அமைச்சரின் அறிக்கை

21—8—1972-ம் நாள் அளித்த விடையைச் சரிசெய்து மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, கடந்த 21—8—1972-ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள், "பர்மா அகதிகளுக்காகக் கட்டப்படுகிற வீடுகளுக்கு மத்திய சர்க்கார் கடனுகைக் கொடுக்கிறார்கள். அதனால் சகல பர்மா அகதிகளுக்கும் வீடு கட்ட முடியாமல் இருக்கிறது. பாதித் தொகையை மானியமாகவும், பாதித் தொகையைக் கடனுகவும் மத்திய சர்க்கார் அளிக்கவேண்டும் என்று நமது சர்க்கார் சிபார்சு செய்யுமா"? என்று கேள்வி கேட்டார்கள். அதற்கு நான் பதில் அளிக்கும்பொழுது "மத்திய சர்க்கார் இப்போதே முழுத் தொகையையும் கடனுகத் தருகிறபோர்து நாம் பாதித் தொகையைக் கடனுக அளிக்கவேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை என்று அந்த அரசு கருதுகிறது" என்று கூறியிருக்கிறேன். இப்பொழுது அதைச் சரி செய்து அறிக்கை அளிக்க விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் கிராமப் பகுதிகளிலே அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்காக 1,450 ரூபாய் கடனுகவும், 600 ரூபாய் மானியமாகவும், நகர்ப்புறப் பகுதிகளிலே ரூபாய் 4,100 கடனுகவும் தருகிறது என்று திருத்தி அந்தக் கேள்விக்குரிய பதிலை—இதைப் பற்றி ஒரு அறிக்கை@ மேஜை மீதும் வைக்கப்பட்டிருக்கிறது—இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1973-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

@ 335—337 -ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

* 337—344 ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

* 345—354 -ம் பக்கங்களில் ஆளுநர் பேருரையின் தமிழாக்கம் நான்காம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.